සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය<br>எனது இல<br>My No | DSD/HO/14/SS/2/VII/3/2025-2 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | ............................................ | දිනය<br>திகதி<br>Date | 2025.09.02 |
|---|---|---|---|---|---|

.

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் :- 2025/11**

சகல மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமை அதிபதிகள்/மாவட்ட செயலாளர்கள்,

சகல மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்கள்,

சகல பிரதேச செயலாளர்கள்,

சகல பிரதி சமுர்த்திப் பணிப்பாளர்கள்/உதவி சமுர்த்திப் பணிப்பாளர்கள்,

சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,

சகல விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள்/சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

**சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் "சமுர்த்தி சிப்தொர" புலமைப் பரிசு வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் - 2025 -2027**

01. **பின்னணி**

சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை கிடைக்காத நிலையிலும் கூட சமுர்த்தி நிவாரண உதவியைப் பெற்று அஸ்வெசும நன்மைகள் கிடைக்கப்பெறாத குடும்பங்களின் உயர்தரத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்காக சிப்தொர புலமைப் பரிசு வேலைத் திட்டத்தினை மேலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு சமுர்த்தி சமூக அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்புச் சபை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. அதன் பிரகாரம் அக்குடும்பங்களில் க.பொ.த (சாதாரண தரம்)2024(2025) பரீட்சைக்கு தோற்றி க.பொ.த(உயர் தரம்) கற்பதற்காக பாடசாலைகளில் சேருகின்ற மாணவர்களுக்கு இப்புலமை பரிசு வழங்கப்படுகின்றது.

**02. நோக்கங்கள்**

2-1 நிதிக் கஷ்டம் காரணமாக க.பொ.த(உயர் தரம்) கற்பதிலிருந்து விடுபடுகின்ற மாணவர்கள், பாடசாலையை விட்டு செல்வதனைத் தவிர்த்து எதிர்கால கல்வியை பாதுகாப்பதும், உயர் கல்விக்கான சந்தர்ப்பத்தினை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை விரிவுபடுத்துவதற்கு ஒத்துழைப்பதும் அதனூடாக நல்ல நிலைக்கு வருவதற்கு முன் வைப்பதும், பொருத்தமான தொழில்களுக்கு தகுதிகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதுமாகும்.

2.2 மாணவர்களின் விடயத்தோடு இணைந்த அறிவை விருத்தி செய்வதோடு ஆத்மீக அபிவிருத்தியுனூடாக சிறந்த சமூக பொருளாதார சூழல் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு ஒத்துழைப்பதும் அதனூடாக நாட்டுக்கான பயனுள்ள சிறந்த வலுவூட்டப்பட்ட பிரஜைகளை உருவாக்குவதுமாகும்.




| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |
| | | **Hot Line :0112-889007** | | | |

## 03. தேவையான தகைமைகள்

3.1 குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமான வசிப்பிடத்தினை கொண்டிருத்தல்.

3.2 2023 ஜூன் மாதம் வரை சமுர்த்தி நிவாரண உதவி கிடைக்கப்பெற்றிருந்து அஸ்வெசும நன்மைகள் கிடைக்காத குடும்பம் ஒன்றின் பிள்ளையாக இருத்தல்.

3.3 க.பொ.த (சாதாரண தரம்) 2024(2025) பரீட்சையில் தோற்றி 2025 - 2027 கல்வியாண்டில் உயர்தரத்தினை கற்கின்ற மாணவன்/மாணவி ஒருவராக இருத்தல்.

## 04. சிப்தொர புலமைப் பரிசு நன்மைகளின் பொருட்டு பதிவு செய்தல்.

4.1 இந்த சிப்தொர புலமைப் பரிசு வேலைத் திட்டம் தொடர்பில் குறித்த பிரிவில் சமுர்த்தி நிவாரணத்தினை பெற்றிருந்து அஸ்வெசும நன்மைகள் கிடைக்கப்பெறாத குடும்பங்களை விளக்கமளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

4.2 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பு - A படிவத்தின் பிரகாரம் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்ப படிவத்தினை விண்ணப்பதாரிகளால் பூர்த்தி செய்து உரிய பாடசாலையின் அதிபரது உறுதிப்பாட்டுடன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி வங்கி முகாமையாளரின் சிபாரிசுடன் குறித்த பிரதேச செயலகத்தின் தலைமைப் பீட முகாமையாளரின் சிபாரிசோடு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்திற்கு முன் வைத்தல் வேண்டும்.

4.3 விண்ணப்பப் படிவங்களை பொறுப்பேற்றதன் பின்னர் பயனாளி மாணவரின் பெயரில் சிசுரக்க கணக்கொன்றை சமுர்த்தி வங்கியில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

4.4 மேலும் குறித்த விண்ணப்ப படிவத்தில் பயனாளியின் கையடக்க தொலைபேசி இலக்கத்தினை குறிப்பிட வேண்டியதுடன் சிப்தொர புலமைப் பரிசுத் தொகை வரவானவுடனேயே அத் தொலைபேசிக்கு குறுந் தகவல் மூலம் அறிவிக்கப்படும் என்பதனை பயனாளி விளக்கமளிக்கப்படல் வேண்டும்.

4-5 இவ்வாறு பதிவு செய்து கொள்ளப்படும் புலமைப் பரிசு பெறும் மாணவர்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிப்தொர புலமை பரிசு உரித்தும் படிவத்தினை (நிழற் பிரதியை பெற்றுக் கொள்ளவும்) பூர்த்தி செய்து வழங்க வேண்டியதுடன் அதன் உரித்துப் படிவ இலக்கத்தினை விண்ணப்பத்தில் உட்படுத்துதல் வேண்டும்.

4.6 2025/2027 கல்வி உயர்தர கல்வி நடவடிக்ககைகள் 2025.08.25ம் திகதியிலிருந்து ஆரம்பமாகியுள்ள தகவல்களுக்கமைய உரிய தகவல்களை இணைப்பு B மூலம் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அங்கீகாரத்தோடு சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிப் பிரிவிற்கு ssfsamurdhi@yahoo.com என்ற மின்னஞ்சல் ஊடாக 2025.09.30ம் திகதிக்கு முன்னர் முன்வைத்தல் வேண்டும்.

4.7 ஏதேனும் காரணம் ஒன்றின் அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்குள் விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்க முடியாமல் போனால் அப்புலமைப் பரிசிலுக்குறிய மாணவர்களுக்கு நிலுவையான தவணைப்பணம் கிடைக்கப் பெறாது என்பதனால் குறித்த பயனாளிகளை விளக்கப்படுத்தி புலமைப் பரிசு உரித்தின் பொருட்டு தகுதிகளை பெறுகின்ற சகல மாணவர்களையும் குறித்த காலத்திற்குள் பதிவு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4.8. சிப்தொர புலமைப் பரிசிலைப் பெறுபவர்கள் பாடசாலைக் கல்வியிகை பெறுகின்றனர் என்பதனை ஒவ்வொரு 06 மாதத்திற்கொருமுறை உரிய பாடசாலையின் அதிபரது சிபாரிசினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் ஏனைய ஒவ்வொரு மாதமும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசின் பிரகாரம் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும்.

**05. மாதாந்த தவணைப் பணத்தினை அனுப்புவதற்குரியதாக சிப்தொர புலமைப் பரிசைப் பெறும் மாணவர்களின் தகவல்களை வழங்குதல்.**

5.1 மாதாந்த தவணைப் பணத்தினை நேரடியாக அனுப்புவதன் மூலம் குறித்த சமுர்த்தி வங்கியின் ஊடாக பயனாளி மாணவரின் சிசுரக்க கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் அது தொடர்பில் 2025.07.19ஆம் திகதியிடப்பட்ட 2025/10 என்ற இலக்கத்தினையுடைய சமுர்த்தி சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5.2 பிரதேச செயலகப் பிரிவு தொடர் முறைக்கு ஏற்ப 2025/2027 கல்வி ஆண்டினையும் உட்படுத்தி தயாரிக்கப்பட்ட படிவம் (இணைப்பு-01)(Excel Sheet) மின்னஞ்சல் ஊடாக இதனோடு முன்வைக்கப்படுவதுடன் அதன் பிரகாரம் பூர்த்தி செய்த படிவத்தினை ssfsamurdhi@yahoo.com மின்னஞ்சல் ஊடாக சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிப் பிரிவிற்கு ஒவ்வொரு மாதத்திலும் இரண்டாம் வாரத்திற்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதன் அச்சுப்பிரதியினை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் கையொப்பத்துடன் சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிப் பிரிவிற்கு முன்வைத்தல் வேண்டும்.

5.3 மேலும் மாதாந்த சிப்தொர புலமை பரிசு தவணைப் பணத்தினை கோரும் போது இதுவரை சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரிப் பிரிவிற்கு சமர்ப்பித்த பொழிப்பறிக்கையினை(இணைப்பு - 02) புதிய கல்வி ஆண்டுக்கு அமையவும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் அங்கீகாரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

5.4 புதிய கல்வி ஆண்டில் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகி தவணைக் கொடுப்பனவுகள் தொடங்குவதற்கு தாமதமாகும் காலத்திற் குரியதாக மாதத்திற்கு ஒரு படிவம் வீதம் (இணைப்பு-1 மற்றும் இணைப்பு-2) சமர்ப்பிக்க வேண்டியதுடன் பின்னர் 2025.07.19ஆம் திகதியிடப்பட்ட சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2025/10 இன் 05ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்கு ஏற்றார்போல நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5.5 நேரடியாக பணம் அனுப்புவதன் மூலம் சமுர்த்தி வங்கிகளுடாக மாணவர்களின் கணக்குகளில் பணத்தினை வரவிடும் போது நிலுவையான தவணைப் பணத்தினை செலுத்த முடியாது என்பதனால் சரியான தகவல்களை உரிய கால வரையறைக்கு ஏற்ப அனுப்புவது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதுடன் அது தொடர்பில் தங்களது விசேட கவனத்தினைச் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**06. மாதாந்த தவணைப் பணத்தினை வங்கிக்கு அனுப்புவதும் புலமைப் பரிசைப் பெறும் மாணவர்களின் கணக்குகளுக்கு வரவு வைத்தலும்.**

6.1 மாவட்ட மட்டத்திலிருந்து வரவழைத்துக் கொள்ளப்படும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு மாதத்தினதும் மூன்றாவது வாரத்திற்குள் அம்மாதத்திற்குரிய தவணைப் பணம் வங்கிக்கு அனுப்பப்படுவதுடன் ஆகக் கூடியது 24 தவணைகள் வரை நன்மைகள் செலுத்தப்படுகின்றன.

6.2 அதன் பிரகாரம் மாதத்தின் மூன்றாம் வாரம் முடிவடைவதற்கு முன்னர் சமுர்த்தி வங்கியால் அம்மாதத்திற்குரிய தவணைப் பணத்தினை புலமைப் பரிசினைப் பெறும் மாணவர்களின் கணக்குகளில் வரவிட வேண்டியதுடன் அது சமுர்த்தி வங்கி முகாமையாளரின் பொறுப்பாகவும் உள்ளது

6.3 புலமைப் பரிசினை பெறுகின்ற மாணவர்களின் கணக்குகளில் பணம் வரவானதுடன் வலையமைப்பின் ஊடாக மாணவர்களின் தாயின் / தகப்பனின் அல்லது பொதுகாப்பாளரின் கையடக்க தொலைபேசிக்கு குறுந் தகவல் ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும்.

6.4 புலமைப் பரிசினை பெறுகின்ற மாணவர்களுக்கு குறித்த மாதத்தின் தவணைப்பணம் உரிய நேரத்தில் கிடைக்காவிட்டால் அல்லது குறித்த குறுந்தகவல் கையடக்க தொலைபேசிக்கு கிடைக்காவிட்டால் குறித்த புலமை பரிசை பெறுகின்ற மாணவரால் தனது பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக சமுர்த்தி வங்கி முகாமையாளருக்கு அறிவித்தல் வேண்டும். அது தொடர்பில் சகல வங்கிகளிலும் அறிவித்தல் ஒன்று காட்சிப்படுத்தப்பட வேண்டியதுடன் தொலைபேசியின் ஊடாக பயனாளிகள் தொடர்பு கொள்ளக் கூடிய பிரகாரம் பிரிவுப் பொறுப்பு

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்/சமுர்த்தி வங்கி முகாமையாளரின் தொலைபேசி இலக்கத்தினை காட்சிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

**07. அறிக்கையிடலும் பின் பணி ஆய்வும்.**

7.1 மென்பொருள் தொகுதியூடாக வங்கி அறிக்கைகள் தொகுதியில் (MIS Reporting)நுழைவதற்கு கீழுள்ள உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

7.1.1. பிரதேச செயலகம் - சமூக பாதுகாப்பு விடயப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது பிரதேச செயலாளரால் பெயரிடப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் 7.1.2. மாவட்ட செயலகம் - சமூக பாதுகாப்பு விடயப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் பெயரிடப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர்.

7.1.3. தலைமை அலுவலகம் - பணிப்பாளர் (சமூக பாதுகாப்பு மற்றும் நலன்புரி) அல்லது பணிப்பாளரால் பெயரிடப்படுகின்ற ஒரு உத்தியோகத்தர்.

7.2 அதன் பிரகாரம் பணம் வரவிடுவது தொடர்பில் பிரதேச,மாவட்ட மற்றும் தலைமை அலுவலகங்களில் அந்தந்த மட்டத்தில் மாதாந்த பொழிப்பறிக்கையினை குறித்த உத்தியோகத்தர்களால் ஆவணப்படுத்தி வைத்துக் கொள்ளல் வேண்டும்.

7.3 வங்கி அறிக்கைகளை தொகுதியூடாக மாதாந்தம் சரியாக இற்றைப்படுத்தப்பட்ட அறிக்கையினை பெற வேண்டுமாயின் வங்கியால் குறித்த தினத்தில் பணத்தினை புலமைப் பரிசைப் பெறும் மாணவர்களின் கணக்குகளில் வரவிடுதல் வேண்டும் என சகல உத்தியோகத்தர்களும் கவனத்தினை செலுத்தி இந்த செயற்பாடுகளுக்கான வழங்கியுள்ள கால வரையறைக்குள் உறிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

**08. புலமைப் பரிசு நன்மைகள் செயலற்றுப் போதல்.**

8.1 புலமைப் பரிசினை பெறுபவர் பாடசாலைக் கல்வியை விட்டு விடுதல்.

8.2 புலமைப் பரிசை பெறுபவர் மரணித்தல்.

8.3 புலமைப் பரிசை பெறுகின்ற மாணவன் சொந்தமான குடும்பமானது புதிய அஸ்வெசும பயனாளிக் குடும்பம் ஒன்றாக உரித்துக் கிடைப்பது.

8.4 தற்போது அஸ்வெசும நன்மைகளைப் பெறுகின்ற குடும்பம் ஒன்றின் மாணவர் ஒருவர் என்பதனை இனம் காண்கின்றமை.

08. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களை வலுவூட்டும் பணியின் முக்கிய பிரிவு ஒன்றான உள சமூக வலுவூட்டல் மற்றும் சமூக பாதுகாப்புப் பிரிவின் பொருட்டு ஏதேனும் சிறந்த தாக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதற்கு இந்த சிப்தொர புலமை பரிசு வேலைத் திட்டம் பங்களிப்பினை வழங்குகின்றது.

09. இது தொடர்பில் தங்களது விசேட கவனத்தினை செலுத்துமாறு வினையமுடன் அறியத் தருவதுடன் இந்த வேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்ளும் பொருட்டு வழங்கும் ஒத்துழைப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சீ.டீ.களுஆரச்சி
பணிப்பாளர் தலைமைஅதிபதி

பிரதிகள்

1. செயலாளர், கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல்கள் அமைச்சு - த.கூ.க. பொருட்டு
2. பணிப்பாளர் (குறு நிதி)சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
3. உதவிப் பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
4. பிரதான உள்ளக கணக்காய்வாளர் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டும் அ.கொ.பொருட்டும்
5. ஏனைய சகல பிரிவு தலைவர்கள். - அ.கொ.பொருட்டு